
# பெரட்டுக்களம்

களம் : 2
பகிரல் - நண்பர்களுக்கிடையில் மட்டும்
பெரட்டு : 1
(மே 2014)

## கூடை சுமப்பவர்களின்
## கூரையும்
## பாரம் சுமக்கும் நிலை.... !



வெளியீடு : மலையக சமூக ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரட்டுக்களம்

களம் : 02
பெரட்டு : 01 (மே 2014)
தொடர்புகளுக்கு : upcosorec@yahoo.com
: 071 4806035, 071 4903509


## புதிய பெரட்டு - மலையகத்தில் அரசியல் கருத்தடையா?

உலகெங்கும் வாழ் தொழிலாளர்கள் தாம் வென்ற, வெல்லும், வெல்லப்போகும் தொழில் உரிமைகளுக்காக மே 1ம் திகதி விழா எடுத்து மகிழ்கின்றார்கள்.

தொழிலாளர்கள் தம் உரிமை போராட்டத்தின் போது பட்டினியோடு போராட்டக் களம் நின்று போராடுகையில் அரச பயங்கரவாதம் தம் அடக்கு முறை கை கூலிகளைப் பாவித்து, ஆயுதத்தைப் பிரயோகித்து உழைப்பாளர்களை கைது செய்ததோடு தமது இரத்த தாகத்தை தீர்த்து உயிர்களையும் பல எடுத்துள்ளனர். அடக்கு முறைக்கு அஞ்சாது இரத்தம் சிந்தி, சிறை சென்று உயிர்த்தியாகம் புரிந்தே வாழ்வுரிமைகளையும், தொழில் உரிமைகளையும் வென்றனர் என்பதே வரலாறு.

வரலாற்றில் எந்தவொரு காலக்கட்டத்திலும் முதலாளித்துவம் தொழிலாளர் உரிமைகளை மலர் தாம்புலத்தில் வைத்து ஈந்ததாக பதிவுகள் கிடையாது முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இன்று திட்டமிட்டு தொழிலாளர் வர்க்கத்தை பல்வேறு நிறங்களில் கூறு போட்டு அவர்களுக்கிடையே மோதலை உருவாக்கி குளிர் காய்கின்றது..

அதோடு தொழிற்சங்க தலைவர்களை சலுகைகளால் விலைக்கு வாங்கி, சொகுசு வாழ்வில் மிதக்கவிட்டு அதையே தமக்கு சாதகமாக்கி வர்க்க விடுதலை போராட்டத்தை மழுங்கடிப்பதை தெளிவாகக் காண்கின்றோம்.

இன்னுமொரு பக்கம் அடக்குமுறை இயந்திரங்களான பொலீஸ், இராணுவம், நீதித்துறை எல்லாமே ஆட்சியாளர்களின் கைகளில் சிக்கியுள்ளதால் அவையும் தொழிலாளர்க்கு எதிராக திருப்பிவிடப்படுதோடு உரிமை போராட்ட சக்தியும் பயத்தினால் வேர் அறுக்கப்படுகின்றது.

அதுமட்டுமல்ல இன்று தொழிற் சங்கங்கள் கட்சி அரசியலில் சங்கமித்துள்ளதால் தமது கட்சி அரசியல் சக்தியை வெளிப்படுத்துவதும் ஆளும் கட்சி தமக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்பதை காட்ட அரச வளங்களை எல்லாம் பாவித்து சூறையாடு சலுகைகளை வாரி வழங்கி மக்களை ஒன்று திரட்டுவதும், எதிரணி அரசியல் கட்சிகளும் அரச எதிர்ப்பைக் காட்ட ஆட்சி கதிரைகளை நோக்கிய விழாவாக்கியும் மே தின போராட்ட சக்தியை போதைகளுக்குள்ளாக்கி தமது அரசியல் காய் நகர்த்தல்களை மேற் கொண்டு மே தினம் கொச்சை படுத்தப்படுகின்றது.

கட்சி அரசியல் வாதிகளிடமிருந்து மே தினம் பிடுங்கப்படு தொழிலாளர் வர்க்கம் ஒன்று பட்டால் மட்டுமே மே தினம் புதிய பாதை நோக்கி பயணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையகத்தில்:**
நம் மூதாதையர்களினதும், நமதும் கால் தடம் பதித்த மலைகளும், கைப்பட்ட மண்ணும், தேயிலையும் நாட்டுக்கு அந்நிய செலவாணியை அள்ளித் தந்து கொண்டிருக்கின்றன.

மலையகத்திற்கு வெளியே ஆசியாவின் ஆச்சரியமாய் அதி உயர் கோபுரங்கள், கட்டிடங்கள், நகர அலங்காரங்கள், புதிய பூங்காக்கள், விஷேட நடை பயிற்சி பாதைகள், மிதி வண்டி பாதைகள், மட்டுமல்ல புதிய துறைமுகம், புதிய விமான நிலையம், அதிவேகப் பாதை இவைகளை விட நாட்டின் புவி அமைப்பையே மாற்றி புதுத்தீவு என அபிவிருத்தி காட்டப்படுகின்றது.

**ஆனால் மலையகத்தில் எமது நிலை....**

- இன்னும் எப்போது இடிந்து விழும் என தெரியாத ஆங்கிலேயக் காலத்து குதிரை லாயமான பழைய லயன்கள்.
- தண்ணீர், மலசலகூடம், பாதைகள், தரமான வைத்தியசாலை, வைத்தியர்கள், தேவையான மருந்து போன்ற அடிப்படை தேவைகள் இன்றியே வாழும் நிலை.
- உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை.
- இனரீதியாக அரசியலில் உள் வாங்கப்படாமை.
- இன ரீதியான ஒடுக்குமுறை (பொருளாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு, காணி கட்டாயத் கருத்தடை.
- தொழில் இன்மை.
- தொழில் தேடி நகரங்களுக்கும், வெளிநாட்டுக்கும் தள்ளப்படும் நிலை.
- மலையகத்திலும், வெளியிலும், வெளிநாட்டிலும் தொழில் பாதுகாப்பின்மை.
- தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்படாமை.

பொதுவாக வாழ்வே இழந்த நிலை மலையகத்தில். எல்லாம் இழந்து ஒன்றுமற்று வாழும் மக்களை ஒன்று திரட்டி மே தினத்தில் களி நடனம் புரிந்து ஆட்சியாளர்களுக்கு தம் சக்தியை காட்ட முனையும் அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மக்கள் உரிமைகளை பெற்றுக் கொடுக்காதது மட்டுமன்று மலையக மக்களை மாயைக்குள் தள்ளி போராட்ட சக்தியை கருத்தடை செய்துள்ளார்கள்.!

**உழைக்கும் மக்களே பெரட்டுக் களத்தில் ஒன்று திரளுங்கள்...**
**நம் உரிமைகளுக்காய் அணி வகுப்போம்.**
எம்மீது சவாரி புரிவோரை வீழ்த்துவோம்.
வெற்றியை நமதென்று பயணிப்போம்..
மலையக தேசியம் காப்போம்! சுதந்திர இனமாய் வாழ்வோம்!. **ஆசிரியர் குழு**

## தகர்ப்பு

இராஜ குமாரன்
மகிழ்ந்தாடி
விளையாடிட
காலி முகத்திடலில்

ஊஞ்சலாய்
புதுத்தீவு
உழைக்கும்
மக்கள்
பிறந்து

தவழ்ந்த
இடமோ
தலை நகரில்
தகர்ப்பு

மலையகமோ
வறுமையில்
தவிப்பு.

மா.ச.
அகலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தேசியம்:
## சிதைக்கப்படும் அடிப்படைப் பொருளாதாரம்

~ வோல்டர் டெரி ~

ஒரு தேசிய இனத்தின் இருப்பை பாதுகாப்பதில் தூண்களாக இருப்பவை நிலம், பொருளாதாரம், மொழி, கலாசாரம் என்பனவாகும். இதில் பொருளா தாரத்திற்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு. தேசிய இனத்தின் கூட்டிருப்பிற்கான வாழ்வாதாரத்தையும், கூட்டுரிமைக்கான பலத்தையும் இதுவே கொடுக்கின்றது.

மலையகத் தமிழருடைய அடிப்படைப் பொருளாதாரமாக பெருந்தோட்டத் துறை பொருளாதாரமே விளங்குகிறது. இது மூன்று வகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

1. மலையக தேசிய இனத்தினுடைய இருப்பிற்கு ஆதாரமாய் இருப்பது.

2. இந்த பொருளாதாரத்தை உருவாக்கியவர்களே மலையக மக்கள் தான். உருவாக்கத்திற்கு மலையகத் தமிழர்கள் கொடுத்த விலைகள் அதிகம். இன்னொரு வகையில் கூறப் போனால் மலையகத் தமிழரின் இரத்தத்தினால் கட்டியெழுப்பப்பட்டதே இலங்கையின் பெருந்தோட்டத் துறை பொருளா தாரமாகும்.

3. பெருந்தோட்ட பொருளாதாரம் மலையக மக்களுக்கு ஒரு பேரம் பேசும் பலத்தை கொடுக்கிறது.

### பெருந்தோட்டத் துறையின் ஆரம்பம்

1823ல் கம்பளைக்கு அருகில் சிங்கப்பிட்டியவில் ஜோர்ஜ் பேர்ட் கோப்பி தோட்டத்தை ஆரம்பித்தார். 1869 இல் கோப்பி செய்கையில் ஏற்பட்ட நோய் காரணமாக கோப்பி செய்கை அழிவுற தொடங்கியது. முதலில் மடுல்சீம பிரதேசத்தில் ஆரம்பித்த இந்நோய் படிப்படையாக பரவத் தொடங்கி 1880களில் கோப்பி செய்கையை முழுமையாக முடிவுக்கு கொண்டு வந்தது. 1866ல் ஜேம்ஸ் டெயிலர் ஹேவாஹெட்டை – லுல்கந்தரவில் 50 ஏக்கர் காணியில் தேயிலை பயிர்ச் செய்கையை ஆரம்பித்தார். 1879 இல் ஹென்றி விகம் இறப்பர் செய்கையினை ஆரம்பித்தார்.

இவற்றின் தொடர்ச்சியாக 1870களில் ஹட்டன் பகுதியிலுள்ள டிக்கோயா, டன்பார், தரவல போன்ற இடங்களிலும், 1885 களில் பதுளை பகுதியிலுள்ள நமுனுகுல, பசறை, மொனராகலை, ஒப்டன், மடுல்சீம போன்ற இடங்களிலும், 1886களில் நுவரெலியா, அப்புத்தளை போன்ற இடங்களிலும் 1894களில் பண்டாரவளை பகுதியிலும், 1924களில் இரத்தினபுரி, ஹல்துமுல்ல, தம்பதென்ன போன்ற இடங்களிலும் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

### தென்னிந்தியத் தமிழரின் வருகை

1798 – 1805 வரை ஆளுநர் நோர்த் முப்பதாயிரம் பவுண்ட் செலவழித்து தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை அழைத்து வந்துள்ளார். யுத்தம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் நிர்மாண வேலைகளின் நிமித்தம் அழைத்து வரப்பட்ட இவர்களே முதலில் வந்த தென்னிந்தியர்கள் ஆவர். (முன்னர் மன்னர்கள் காலத்தில் தென்னிந்தியர்களின் வருகை இருந்த போதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்த பிறகு இடம்பெற்ற முதல் வருகை இதுவே.) இவ்வாறு வந்தவர்கள் பயனியர் ரோட் கோப்ஸ் (ஆரம்ப பாதை படைவீரர்கள்) என்றழைக்கப்பட்டனர்.

அடுத்து 1818இல் இங்கு எழுந்த கிளர்ச்சியை அடக்குவதற்கென்று 5 ஆயிரம் பேர் அழைத்து வரப்பட்டனர். இதில் தமிழர்கள் நிறையவே இருந்துள்ளனர். இவர்கள் பாதைகள் திறக்கவும், பாலங்கள் கட்டவும், குளங்கள் கட்டவும், ரயில்வேத் திணைக்கள வேலைகள் செய்யவும் பயன்படுத்தப்பட்டனர். தோட்டங்களில் வேலை செய்வதற்கென முதலில் 1828இல் தான் தென்னிந்தியத் தமிழர்கள் 14 பேர் அழைத்து வரப்பட்டனர். இதனை ஆரம்பித்து வைத்தவர் ஜோர்ஜ் போர்ட் என்ற ஆங்கிலேயர் ஆவார். ஒட்டுமொத்த இலங்கையின் அபிவிருத்திக்கும், அந்நிய செலவாணி சம்பாத்தியத்திற்கும் வித்திட்டவர்கள் இத் தொழிலாளர்களே ஆவர்.

## பெருந்தோட்டப் பொருளாதார உருவாக்கத்தில் மலையகத் தமிழர்

இலங்கையில் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை உருவாக்கியவர்ளே அன்று இந்தியத் தமிழர் (1911 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது இந்த மக்களின் அனுமதியின்றி ஆங்கிலேயர்களினால் கொடுக்கப்பட்ட இன அடையாளம்) என அழைக்கப்பட்ட மலையகத் தமிழர் தான். தமிழ் நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் இலங்கையின் மத்திய மலைநாட்டில் குடியேற்றப்பட்டனர், தமிழ்நாட்டின் திட்டமிட்ட பஞ்சம் ஏற்படுத்தப்பட்டு, ஆசை வார்த்தைகள் கூறியே இராமநாதபுரம், வட ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, போன்ற மாவட்டங்களிலிருந்து இவர்கள் அழைத்து வரப்பட்டனா. கொடிய வனவிலங்குகள் நிறைந்த அடர்ந்த வனப் பிரதேசங்களை அழித்து வளமிக்க பெருந்தோட்டங்களை உருவாக்கியவர்கள் மலையகத் தமிழராவார்.

காடுகளை வெட்டி வளம் கொழிக்கும் பூமியாக மாற்றும் போது இத்தொழிலாளர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி, யானை , சிறுத்தை, நரி, கரடி, போன்ற மிருகங்களினதும் பாம்பு போன்ற விஷ ஜந்துக்களினதும் தாக்குதல்களில் எண்ணிக்கையில் அடங்காதவர்கள் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர்.

இவ்வாறே தமிழ் நாட்டிலிருந்து கடல் வழி பயணத்தின் போது சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்தே இம் மக்கள் இலங்கையின் மத்திய மலைநாட்டு கண்டி சீமையை வந்தடைந்தனர். அன்று கண்டி செல்வம் கொழிக்கும் சொர்க்கபுரி என்று ஆசை வார்த்தைகளை சொல்லியே தமிழகத்தில் பஞ்சத்தில் தவித்த மக்களை அழைத்து வந்தனர். வரும் வழியில் தமிழ்நாட்டு கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களை நடந்து வந்தே தென்னகத்தின் கரையோரங்களை அடைந்தனர். கடல் வழி பயணத்தின் பின் தலைமன்னாரிலிருந்தும், மன்னாரிலிருந்தும் 150 மைல்களுக்கு மேல் நடந்த பின்னரே மாத்தளை, கண்டி பிரதேசங்களை அடையக் கூடியதாக இருந்தது அங்கிருந்து மீண்டும் பல மைல்கள் நடந்தே தாங்கள் செல்ல வேண்டிய தோட்டங்களை சென்றடைந்தனர்.

கடலை கடப்பதற்காக கட்டுமரங்கள், தோணி, படகுகள் என்பன ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1833 முதலே நீராவி கப்பல் பயன்படுத்தப்பட்டது. படகிலேயே குழந்தைகள் பிறந்துள்ளன. பலர் இறந்துள்ளனர். பிறப்பையும், இறப்பையும் கடலிலேயே சந்தித்த சமூகமாக மலையகத் தமிழர் உள்ளனர். ஆடுமாடுகளைப் போல் படகுகளில் இவர்கள் ஏற்றி வரப்பட்டனர். இலங்கைக்கு வர படகுகளில் பயணித்தவர்களில் 15% மானோர் புயல் மற்றும் இயற்கை அனர்த்தங்களில் படகு கவிழ்ந்து இறந்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது. கடல் வழிப் பயண துன்பங்களின் பதிவுகள் முழுமையாக இல்லாவிடினும் பதிவு பெற்றவற்றில் 1868 இல் ஆதிலெட்சுமி என்ற கலத்தில் வந்த 120 பேரும் படகு கவிழ்ந்ததில் கடலில் மூழ்கி இறந்து போனதாக அறிய முடிகிறது.

தலை மன்னாரிலிருந்து பேசாலை வழியான காட்டு பயணத்தில் மாத்தளை, கண்டியை நடைபாதையில் கடந்த போது மிருகங்களுக்கும், நோய்களுக்கும் எண்ணற்ற உயிர்களை இழந்தது மலையக சமூகம். நடக்கும் போது நடுக்காட்டில் சில இடங்களில் ஒரு சொட்டு தண்ணீரும் கிடைக்காது. சில இடங்களில் சதுப்பு நிலங்களில் முழங்கால் அளவு தண்ணீரில் நடக்க வேண்டியிருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக தோட்டங்க்ளை அடைந்த பின்னர் பல்வேறு அடக்கு முறைக்கு அப்பால் மாறுபட் (பனி, குளிருடன் கூடிய) சுவாத்திய நிலைகளால் வாந்திபேதி, பெரியம்மை, மலேரியா போன்ற நோய்களினாலும் 1841 – 1849 இடையிலான காலப் பகுதியில் 70 ஆயிரம் பேர் தோட்டங்களில் மரணித்ததாக "கொழும்பு ஒப்சேர்வர்" அறிவித்தது.

இவ்வாறு பல இழப்புகளுக்கும், அர்ப்பணிப்புகளுக்கும் மத்தியில் மலையகத் தொழிலாளர்களின் அயராத உழைப்பில் உருவானதுதான் மலைநாட்டின் பசுமை நிறைந்த பெருந்தோட்டங்களாகும். அவர்கள் மரணித்த போது, அவர்களின் உடல் அவர்கள் உழைத்த அதே நிலத்திலேயே குழி தோண்டி புதைக்கப்பட்டது. இன்றும் அதே நிலை தான்!. இவ்வாறான பின்னணியில் பார்க்கும் போது இலங்கையின் பெருந்தோட்ட பொருளாதாரமானது மலையகத் தமிழரின் இரத்தத்தினால் கட்டியெழுப்பப்பட்டது என்பதோடு இப் பொருளாதாரமானது மலையக மக்களுக்கே சொந்தமானதும் ஆகும். இந்த நாட்டில் வாழும் வேறெந்த மக்களும் இவர்களை போல் நாட்டின் உருவாக்கத்திற்காகவும், பொருளாதார மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டிற்காகவும் உயிர் தியாகங்களை செய்யவில்லை.

**அச்சுறுத்தலை நோக்கி மலையகத் தமிழரின் பொருளாதாரம்**

மலையகத் தமிழரின் பிரதான பொருளாதார வளமானது பெருந்தோட்டத் துறை ஆகும். பெருந்தோட்டத் துறை எனும் போது தேயிலையும், இறப்பருமே அதன் முக்கிய கூறுகளாக இன்று உள்ளன. துணைப் பொருளாதார வளங்களாக சிறு விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு வர்த்தகம், அரச வேலைவாய்ப்பு, சுற்றுலாதுறை, மாணிக்கக்கல் அகழ்வு என்பனவும் காணப்படுகின்றன.

இன்று மலையக மக்களின் பிரதான பொருளாதார வளமான பெருந்தோட்டத் துறையானது மிகவும் திட்டமிட்ட முறையில் மலையக மக்களின் கைகளிலிருந்து பிடுங்கப்பட்டு வருவதையும் அவதானிக்கலாம். அதனூடாக மலையக தேசிய இனத்தின் இருப்பில் ஆட்டம் காணச் செய்வதற்காக நீண்டகால திட்டமிடல்கள் இடம் பெற்று வருகின்றன.

1904 ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தமாக 1320 தோட்டங்கள் இருந்துள்ளன. இவை படிப்படியாக குறைந்து முறையே 1980 இல் 668ஆகவும், 1992 இல் 506 ஆகவும் (தோட்டங்கள் மீளவும் தனியார் மயப்படுத்தப்பட்ட வருடம்), 2013 இல் 427 ஆகவும் காணப்படுகின்றன. இது போன்றே பெருந்தோட்டத் துறையின் ஆளணியானது 1981 இல் 497, 995 ஆகவும், 1992 இல் 376, 498 ஆகவும் 2013இல் 193, 412 ஆகவும் குறைந்து செல்லும் ஒரு போக்கை காணலாம்.

மலையகத் தமிழரின் பொருளாதாரமானது மிகவும் திட்டமிட்ட முறையில் ஆட்சியாளர்களினால் பறிக்கப்பட்டு வருவதற்கு மேலே உள்ள புள்ளி விபரம் சிறந்த எட்டுகாட்டாகும். மேலும், 1948, 1949 காலப்பகுதியில் மலையகத் தமிழரின் குடியுரிமை இவ்வாறு திட்டமிட்ட வகையில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் சட்டங்கள் மூலம் பறிக்கப்பட்டதோ அவ்வாறே, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஆட்சி காலத்தில் (1970 – 1977) மலையக மக்களின் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் சட்டங்கள் மூலம் திட்டமிட்டு பறிக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டின் 1ம் இலக்க நிலச்சீர்த்திருத்தச் சட்டம் (இதன் பிரகாரம் நிலச் சீர்திருத்த ஆணைக்குழு அமைக்கப்பட்டு தனியார் காணி உரிமைக்கு உச்ச வரம்பு கொண்டு வரப்பட்டது. 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பெருந்தோட்ட காணி ஆயின் 50 ஏக்கர் எனவும், மற்றைய நிலமாயின் 25 ஏக்கர் எனவும் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டது). 1950ஆம் ஆண்டின் நிலச் சுவீகரிப்புச் சட்டம், 1972 ஆம் ஆண்டின் 2ம் இலக்க பெருந்தோட்டச் சட்டம், 1972ஆம் ஆண்டின் நாட்டின் விவசாய கூட்டுத்தாபனச் சட்டம், 1973ஆம் ஆண்டின் 42ம் இலக்க விவசாய நிலச் சட்டம், 1975ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டம் ஆகிய சட்டங்களை பயன்படுத்தியே அப்போதைய அரசாங்கம் நிலச் சுவீகரிப்பை நடைமுறைப்படுத்தியது.

இதன் பிரகாரம் 166, 405 ஹெக்டேயர் தேயிலை நிலங்கள் உள்ளடங்களாக மொத்தமாக 419, 101 ஹெக்டேயர் நிலம் அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட பெருந்தோட்டப் பயிர் நிலங்கள் 230,000 ஹெக்டேயர் மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் நிருவாகத்திலும் 105,000 ஹெக்டேயர் நிலம் வேறுபட்ட கூட்டுறவு நிறுவனங்களின் நிருவாகத்திலும் விடப்பட்டது. மேலும் 45,000 ஹெக்டேயர் நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

1977 பொதுத் தேர்தலின் பின்னர் பொதுத்துறை நிறுவனம் ஒன்று வாபஸ் பெறப்பட்டதுடன், கூட்டுறவு நிறுவனங்களும் நீக்கப்பட்டன. இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனமும் (Sri Lanka state Plantation Corporation - SLSPC) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் (Janatha Estate Development Board - JEDB) தொடர்ந்து பொதுத்துறை சார்ந்த பெருந்தோட்டங்களை நிருவாகம் செய்தன. பொதுத்துறை சார்ந்த பெருந்தோட்டங்களின் நிருவாகம் 1992இல் மீண்டும் 23 பிராந்திய தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

1930 - 1987 வரை 57 வருடங்களில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டு 105 ஆற்று வடிநில அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலம் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. 1980களில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் 55 ஆயிரம் குடும்பங்களுக்கு 165,000 ஏக்கர் நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இந்த 4 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மலையகத் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு திட்டத்தின் கீழும் நிலம் வழங்கப்படவில்லை. அங்கும் இங்குமாக ஒரு சிலர் சிறிய துண்டு காணியை பெற்றிருக்கலாம்.

இன்றைய நிலையில் பெருந்தோட்டத்துறை பொருளாதாரமானது திட்டமிட்ட பேரிய குடியேற்றங்கள், முறையாக பராமரிப்பின்மை, கிராமமயப்படுத்தில், காடாக விட்டு பிரித்து கொடுத்தல் மீள் நடுகை இல்லாமை, தொழிற்சாலைகளை மூடுதல், வளங்கள் (மரங்கள், கற்கள்) சூறையாடப்படல், மாற்றுப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம் வளங்கள் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்படுகின்றது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு தோட்டத்துறை ஊக்குவிப்பு மூலமாக பெருந்தோட்டத்துறை பொருளாதாரமானது மலையக மக்களின் கைகளிலிருந்து பிடுங்கி எடுக்கப்படுகின்றது.

தென்னைச் செய்கையின் ஆதிக்கத்தை ஏற்கனவே இழந்துள்ள நிலையில் இறப்பர் துறையும் மலையக மக்களின் கைகளை விட்டு முழுமையாக பிடுங்கி எடுக்கப்படும் நிலையிலுள்ளது. இறப்பர் தோட்டங்களை பொறுத்தவரை களுத்துறை. இரத்தினபுரி. கேகாலை உள்ளிட்ட தென் மாவட்டங்களிலேயே அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று பெருமளவிலான இறப்பர் பயிர்ச் செய்கை நிலம் சகோதர சிங்கள இனத்தவர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டு அல்லது அவர்களால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளதால் மலையகத் தமிழரின் தொழில் பாதிக்கப்பட்டு இன்று பெருமளவிலான தொழிலாளர்கள் தொழில் இழந்து அன்றாட வாழ்விற்காக போராடும் ஒரு நிலையே காணப்படுகின்றது. 2013ஆம் ஆண்டு தகவல்களின் படி இறப்பர் செய்கையானது 81,863 ஹெக்டேயர் காணியில் சிறு உற்பத்தியாளர்களினால் செய்கைப் பண்ணப் படுகின்ற நிலையில் 48,917 ஹெக்டேயர் காணியிலேயே பெருந்தோட்ட நிறுவனங்களால் செய்கைப் பண்ணப்படுகின்றது.

இந்நிலையில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமானதொரு விடயத்தையும் சுட்டி காட்டுதல் வேண்டும். அதாவது எந்தளவிற்கு தேயிலையை முதன்மைப்படுத்தி மலையகம் முன்னிறுத்தப்படுகிறதோ அந்தளவு முக்கியத்துவம் இறப்பர் துறைக்கு கொடுக்கப் படுவதில்லை. இதன் விளைவு இன்று இறப்பர் பயிரிடப்படுகின்ற மலையக பிரதேசங்களில் வாழும் மலையகத் தமிழர்கள் தங்கள் அடையாளங்களை இழந்து சிங்கள பௌத்த இன தன்மையை ஏற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மலையகத் தமிழர்களின் நிலையிலிருந்து நோக்குகின்ற போது அவர்களின் பிரதான பொருளாதார வளமான தேயிலை செய்கையை பொறுத்த வரையில் இன்று அத்துறை எதிர்நோக்கும் பிரதான சவால் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் திட்டமிட்ட முறையிலான வளர்ச்சி ஆகும். பெருந்தோட்ட தேயிலை காணி திட்டமிட்ட முறையில் சிறு உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்டுவதோடு, பெருந்தோட்டங்களின் வளர்ச்சிக்கென பெறப்படுகின்ற நிதி உதவிகள் அனைத்தும் சிறு உற்பத்தியாளர்களுக்கே கொடுக்கப்படுகின்றது. 2013ஆம் ஆண்டு தகவல்களின் படி இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் மொத்த நில பிரதேசமான 203, 020 ஹெக்டேயரில் 120, 955 ஹெக்டேயர் சிறு உற்பத்தியாளர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் நிலையில் பெருந்தோட்ட நிறுவனங்களால் 82,065 ஹெக்டேயரில் மட்டுமே பயிரிடப்படுகின்றது. சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் எனும் போது 0.5 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர் வரையிலான நில பிரதேசத்தில் தேயிலை பயிர்ச் செய்கையினை மேற்கொள்வோரையே குறிக்கின்றது. இன்று இவ்வாறான உற்பத்தியாளர்களும் 4 இலட்சம் பேர் (2013ம் ஆண்டு தகவல்) என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மதிப்பிட்டுள்ளது. இச் சிறு உற்பத்தியாளர்களிடமும் மலையகத் தமிழர் தொழிலாளர்களாகவே உள்ளனர்.

மலையகத் தமிழரின் ஆதிக்கத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டு சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளர்களிடம் கொடுக்கப்படும் இந்த தேயிலை காணியின் 90% த்திற்கு மேற்பட்ட தேயிலை வளம் சகோதர சிங்கள இனத்தவர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அனைத்து விதமான மானியங்களும், ஆலோசனைகளும், சந்தைப் படுத்தல் வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். இதற்கென சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்கமும் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் இவ்வாறான திட்டமிட்ட வளர்ச்சியானது மலையகத் தமிழரின் கூட்டிருப்பை சிதைப்பதனால் மலையக தேசியம் சவாலுக்கு உட்படுத்தப் படுகின்றது. மலையகத் தமிழர் கூட்டாக வாழும் நிலை சிதறடிக்கப்படுதால் பொருளாதாரம் மட்டுமின்றி அவர்களின் வாழ்வாதார பிரதேசம் பறிக்கப்படுவதோடு, மொழி, கலாசார விழுமியங்களும் அச்சுறுத் தல்களை சந்திக்கின்றன. பொருளாதார வளமானது நேரடியாகவே பறிக்கப் படுகின்றது. இந்நிலையானது தேசியத்தின் பிரதான கூறுகள் அனைத்தையும் பாதிப்பதால் ஒட்டு மொத்த மலையக தேசியமும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இவற்றுக்கு அப்பால் பெருந்தோட்டத் துறை மறைமுகமாகவும் அச்சுறுத்தப்படுகின்றது. பெரும்பாலான பெருந்தோட்ட நிறுவனங்கள் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குவதாக கணக்கறிக்கைகள் காட்டப்படுகின்றன. ஆனால் இந்நிறுவனங்கள் அதை எவ்வாறு சூட்சகமாக செய்கின்றன என்பதை யாரும் கவனிப்பதில்லை. பெரும்பாலும் அனைத்து நிறுவனங்களும் தங்களுக்கென தனியான சந்தைப்படுத்தல் நிறுவனங்களை வைத்துள்ளன. உற்பத்தி நிறுவனங்களால் நேரடியாக சந்தைப்படுத்தாமல் உற்பத்தி செலவுடன் குறைந்த இலாபத்துடன் தங்களது சந்தைப்படுத்தல் நிறுவனத்திற்கே விற்பனை செய்யப்படுகின்றன. குறித்த சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் பெருத்த இலாபத்துடன் வெளியில் விற்பனை செய்கின்றன. ஆனால் உற்பத்தி நிறுவனம் ஈட்டு இலாபம் மட்டுமே பெருந்தோட்ட நிறுவனங்களின் இலாபமாக காட்டப்பட்டு குறித்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் பெருந்தோட்ட நிறுவனங்களின் இலாபத்தில் தொழிலாளர்களுக்கான பங்கு இல்லாமல் செய்யப் படுகின்றது.



மேலும் அரச தோட்டங்கள் மிகவும் மோசமாக சீரழிக்கப்பட்டுள்ளன. இன்று அனைத்து தோட்டங்களிலும் உத்தியோகஸ்தர்களாக பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களை கூடுதலாக நியமிக்கின்றனர். முகாமைத்துவ மட்டத்திலும் பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கமே காணப்படுகின்றது. இதனால் பெருந்தோட்டத் துறையில் படித்த மலையக இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதோடு, அவர்களை தொழில் நிமித்தம் பெருந்தோட்டங்களிலிருந்து வெளியில் தள்ளும் போக்கும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டத் துறையானது நவீன மயப்படுத்தப்படாமையானது தொழில் அந்தஸ்து பற்றிய வினாவையும் மலையக படித்த இளைஞர், யுவதிகளிடையே எழுப்பியுள்ளது. இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் வேலைவாய்ப்பு தேடி மலையகத் தமிழர் தலைநகர் நோக்கியும், ஏனைய நகர்களை நோக்கியும் குடிபெயர்ந்து செல்ல அவ்விடங்களை கிராமம்புற சகோதர சிங்களவர்களை கொண்டு நிரப்பும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன. இந்த குடி பெயர்வுகள் குடும்பமாக இடம்பெறும் போது மலையகத்தில் நிலத்துடனான சொந்தத்தை இழக்கின்ற நிலையும் காணப்படுகின்றது. இந்நிலையானது மலையக தேசியத்தை தீவிரமாக பாதிக்க தொடங்கியுள்ளது.

## மலையகத் தமிழரின் துணைப் பொருளாதார வளங்கள்

மலையகத் தமிழரின் துணைப் பொருளாதார வளங்களாக சிறு விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு வர்த்தகம், அரச வேலைவாய்ப்பு, மாணிக்கக்கல் அகழ்வு, சுற்றுலாதுறை என்பன காணப்படுகின்றன. சிறு வர்த்தகமானது மலையகத்தில் பரவலாகவும், கொழும்பு, கண்டி போன்ற பெரும் நகரங்கள் உள்ளிட்ட மலையத்தின் அனைத்து நகரங்களிலும் இடம் பெறுகின்றன. சிறு விவசாயமும் மலையகத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டாலும் இன்று பல நெருக்கடிகளை சந்திக்க தொடங்கியுள்ளது. விவசாய உற்பத்திகளுக்கான உள்ளீடுகளின் அதிகரித்த விலை, உற்பத்திகளுக்கு போதிய விலை கிடைக்காமை, இடை தரகர்களின் அபரிமிதமான இலாப உழைப்பு என நெருக்கடிகள் தொடர்கின்றன. கால்நடை வளர்ப்பும் நாட்டின் ஏனைய பிரதேச மக்களுக்கு கிடைப்பது போன்ற வசதிகளும், சலுகைகளும் மலையக தோட்டப்புற மக்களுக்கு கிடைக்காமையால் (பாலிற்கு உரிய விலை கிடைக்காமை, கால்நடை தீவனம் மற்றும் மருத்துவ வசதிகளை பெறுவதிலுள்ள நெருக்கடிகள்) இன்று கால் நடை வளர்ப்போரின் எண்ணிக்கை குறைந்து செல்வதை காணலாம்.

அரச வேலைவாய்ப்புகளில் ஆசிரியர்களே அதிகமாக உள்ளர். இவர்களின் எண்ணிக்கை இன்று பத்தாயிரத்தை தாண்டி உள்ளது. இந்த நிலைக்கு யதன்சைட் ஆசிரியர் கலாசாலையும், ஸ்ரீபாத கல்வியியதர் கல்லூரியும் முக்கிய பங்கு வகித்துள்ளன. ஐம்பது கோடி ரூபா செலவில் முழுக்க மலையகத் தமிழருக்கென ஜேர்மன் நாட்டு மக்களின் நிதி உதவியில் கட்டிக் கொடுக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியும் இன்று முழுமையாக மலையக மக்களுக்கு கிடைக்கவில்லை. கட்டாயமாக 25% சகோதர சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பெருந்தோட்ட தபால் ஊழியர்களாக (400 பேர் வரையும்), கிராம உத்தி யோகஸ்தர்கள், பொலிஸ் உத்தியோகஸ்தர்கள், அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகஸ்தர்கள் என சிறு தொகையினரும் உள்ளனர். அரசாங்க தொழில்களை பொறுத்த வரையில் மலையக பிரதேசத்திற்கு வரும் தொழில்கள்கூட மலையகத் தவர்களுக்கு கிடைக்காத நிலையே உள்ளது. சிற்றூழியர்களாக (சுத்திகரிப்பு தொழிலாளர்கள்) ஓரளவுக்கு கிடைக்கின்றதே தவிர ஏனைய தொழில்கள் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

மலையகத்தின் எல்லா பிரதேசங்களும் சுற்றுலா துறைக்கு பொறுத்தமான அழகான பிரதேசம். இதனால் இதன் மதிப்பும் அதிகம். ஆனால் சுற்றுலா துறையின் ஆதிக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தமிழரின் கைகளில் இல்லை. இதுபோன்றே, உலகின் சிறந்த மாணிக்ககற்கள் இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா போன்ற மலையக மாவட்டங்களிலேயே கிடைக்கின்ற போதிலும் அதன் ஆதிக்கமும் மலையகத் தமிழரின் கைகளில் இல்லை. வெறும் தொழிலாளர்களாகவே இவர்கள் உள்ளனர்.

மலையகத்தில் போதிய வளங்கள் இருந்த போதிலும் ஒழுங்கான திட்டங்கள் இல்லாததினால் மலையக மக்கள் வாழ்வாதாரத்திற்காக மலையத்துக்கு வெளியே குடிபெயர்ந்து செல்லும் நிலையிலேயே உள்ளனர். இந்நிலையானது மலையகத் தமிழரின் தேசிய இருப்பை பெரிதும் பாதித்துள்ளது.

**முடிவுரை**

மலையக மக்களுடைய அடிப்படைப் பொருளாதாரம் பெருந்தோட்டத்துறைப் பொருளாதாரமே! இதைப் பாதுகாப்பதன் மூலமே மலையக தேசியத்தின் இருப்பை பாதுகாக்க முடியும். அதன்படி மலையக மக்களின் கூட்டிருப்பையும், கூட்டுரிமையையும் தக்க வைக்க முடியும். இதற்கு மலையகத் தமிழரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக பெருந்தோட்டத்துறை கூட்டுறவு பொருளாதார முறைமைக்குள் கொண்டு வரப்படல் வேண்டும். இத் தொழிற் துறைக்குள் புலமைசார் ஆற்றலை உட்படுத்தி நவீன மயப்படுத்தல் வேண்டும். இது போன்றே துணைப் பொருளாதார வளங்களையும் முழுமையாக மலையகத் தமிழரின் கைகளை விட்டு போகாத வகையில் பாதுகாத்தல் வேண்டும்.

கூட்டுறவு முறை ஊடாக ஒரு சமூக அதிகார மையத்தை கட்டியெழுப்புதல் வேண்டும். இதற்கு சிறந்த முன் உதாரணமாக யூத மதகுரு தியோடர் ஹர்சலினால் ஏற்படுத்தப்பட்ட "யூத நிதியம்" காணப்படுகின்றது. இந் நிதியத்துனூடாகவே சர்வதேச ரீதியாக நிதி திரட்டப்பட்டு இஸ்ரேலில் யூதர்கள் குடியேற்றப்பட்டு யூத ராஜியம் கட்டியெழுப்பப்பட்டது.

பெருந்தோட்டத் துறையை பொறுத்தமட்டில் முதலில் தற்காப்பு நடவடிக்கையே அவசியமாகும். அதாவது இருப்பதை பாதுகாப்பதாகும். பெருந்தோட்டத்திலிருந்து குடிபெயர்வை தடுத்து, தோட்டத்துறை குடியிருப்புகளை கிராமங்களாக மாற்றியமைத்து பெருந்தோட்டங்களில் உள் வாழ்வை தேடும் நிலையை உருவாக்குதல் வேண்டும். இதனூடாக வெளியார் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த முடியும்.

இவற்றுக்கெல்லாம் கையில் அதிகாரம் வேண்டும். முதலில் படிப்படியாக அதிகாரத்தை பெறுவதனூடாகவே இதனை அடைய முடியும். இதற்காக பிரதேச சபைகளை அதிகரித்தல், பிரதேச சபைகள் பொறுப்புகளை எடுத்தல், பெருந்தோட்டத் துறைக்கும் செல்லுப்படியாகும் வகையில் உள்ளூராட்சி அதிகார சபை சட்டமூத்தின் 33வது பிரிவை மாற்றியமைத்தல், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை மீள செயற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தெவை இன்றுள்ளது. இவை தொடர்பான ஆரோக்கியமான உரையாடலை ஆரம்பிக்க வேண்டியது உடனடி தேவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்

மகனுக்கு கொப்பி வாங்க
பக்கத்து வீட்டு பார்வதியிடம் கடன்
வீட்டுக்காரர் ஆஸ்பத்திரி செலவிற்கு
ஓட்டு லயத்து ஆத்தாவிடம் கடன்
ரோட்டு கடை கடன் அடைக்க
மேட்டு லய மாமியிடம் கடன்
மகள் ஆளாகி நின்றதிற்கு
அலுமேலு ஆயாவிடம் கடன்
தீபாவளி 'அட்வான்சு' கடன்
மாதா மாதம் ஒபீசுக்கு கடன்

கிழிந்த செருப்பு தைக்க
உடைந்த குடை செய்ய
பழுதான டீவி திருத்த
கோயிலுக்கு மாத வரி
கட்சிக்கு மாத சந்தா
'கடன் கடன் கடன்'
நான் அறியா
ஆசியாவின்
அதியுயர் கோபுரத்திற்கு
அதிவேகப் பாதைக்கு
நவீன தாமரை தடாகத்திற்கு
மத்தலை விமான நிலையத்திற்கு

மட்டுமல்ல

அரசியல் வாதிகளின்...
ஆடம்பர சொகுசு வாகனத்திற்கு
அதியுயர் பாதுகாப்பு படைக்கு
மாளிகையான அரச வீடுகளுக்கு
மாதாந்த மின்சார செலவிற்கு
தொலை பேசி கட்டணங்களுக்கு
பொழுது போக்கு ஹோட்டல்களுக்கு
உலகம் சுற்றும் பிரயாணங்களுக்கு
கடன் கடன் கடன்
இடியாய் மின்னலயாய்
கடன் கடன் கடன்

முத்தையா - அப்புத்தளை

# அட்டகாசம்

மே தினத்தில்
வான் எழுந்த
கோசங்களை
வல்லூறு
கவ்விச் சென்றதோ..?
காற்றோடு கலந்த
கோசங்களை
காலன் கவர்ந்தானோ..?
பதாகையில்
எழுதிய
கோசங்களை
அக்கினி பகவான்
எரித்தானோ..?
தொழிலாளர் மேடைகளை
அரசியல் வாதிகள்
அசிங்கப்படுத்தியதால்.

- மலைப்பிள்ளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை

**தெளிவத்தை ஜோசப்**

அந்த நாற்பது காம்பிரா லயயத்தின் நாலாவது காம்பிரா மட்டும் மஞ்சள் குளித்த பெண் போல் தனியாகத் தெரிகிறது. எல்லாச் சுவர்களுமே புகைமண்டிபோயும் சாணிப்பூச்சில் கோடு கோடாய் வெடிப்புக் கண்டும் இருக்கையில் நாலாவது காம்பிராவின் அரைச்சுவர் மட்டும் வெள்ளை மண் பூசப்பட்டு புதுமெருகுடன் சுண்ணாம்படித்த சுவர் போல் காட்சியளிக்கிறது.

கிளாக்கரய்யா பங்களாவுக்கு வெள்ளையடிக்கத் தள்ளப்பட்டபோதே கண்டக்டரய்யாவிடம் சிலுவை நைசாகக் கேட்டான். 'ஏவுட்டு காம்பிராவுக்கும் ஒரு ஓட்டு ஓட்டிக்கிடட்டுமாங்க...'.என்று. 'மூச்...!பேசப்படாது...'என்று கூறிவிட்டார் கண்டக்டர். 'ஆடிப்பூசைநேரத்துல லயக்காட்டுக்கு வெளள்ளையடிக்கையில தான் ஒன் காம்புராவும் அடிபடும்... இப்ப ஒன்னும் சரிபடாது...ஐயா வேதக்காரர்.....கிறிஸ்மஸ்வருது....' என்று கூறிய கண்டக்டரய்யாவிடம் 'கிளாக்கரய்யா வேதந்தானுங்களே நானும்.....அய்யா போற கோயிலக்குத்தானங்களே நானும் போறேன்....'என்ற கொஞ்சம் வாதாடிப் பார்த்தான்.

'ஓஹோ...' என்று முறைத்தவர் 'ஐயாதான் நீயாடா! ஐயா பங்களாதான் உன் காம்புராவா.! ஐயா கும்பிடற சாமி தான் நீ கும்பிடுற சாமியா.! என்று அடுக்கிய கேள்விகளுக்கு 'ஆம்' என்றும் சொல்ல முடியாமல் 'இல்லை' என்றும் சொல்ல முடியாமல் தடுமாறியவன் சுண்ணாம்படிக்கும் மெஷினைத் தூக்கித் தோளில் மாட்டிக் கொண்டு நடந்துவிட்டான் என்றாலும் கிளாக்கரய்யாவின் பங்களா சுவற்றில் தனது வஞ்சத்தை தீர்த்துக் கொண்டான்.

'மிஷின்ல அடிச்சா பளீரெனத் தெரியாதே சிலுவை கொஞ்சம் புருசாலயும் அடிச்சுவிடு என்று கூறிய கிளாக்கரய்யாவிடம் 'சரிங்கய்யா' என்றவன் 'புருசிலையா அடிக்கனும் இரு இரு' என்று கறுவியபடி 'பூஸ் பூஸ்"சென்று சுவற்றில் சுண்ணாம்பு மெஷினால் மருந்தடித்துவிட்டு நடையைக் கட்டினான்.

பங்களா தரை மாத்திரம் வெள்ளை வெளேர் என்று கிடந்தது.

அவனுடைய காம்பிராவும் வெள்ளை வெளேர் என்று தான் இருக்கிறது. வெள்ளை மண் வாங்கியிலிருந்து யாருக்கும் தெரியாமல் இரண்டு வாளி மண் கொண்டு வந்து கரைத்துப் பூசி வெளுக்க வைத்திருக்கிறாள் அவன் மனைவி. முழங்காலை மடித்து பலகைக் கட்டையில் அமர்ந்து மடித்துக் கட்டிய வேட்டியை இழுத்து இழுத்து விட்டுக் கொண்டான் சிலுவை. கோப்பையைய முழங்காலில் நிறுத்தி வலது கையால் பிடித்தப்படி இடதுகையால் சாப்பிடத் தொடங்கினான். லபக் லபக் கென்று அவன் சாதத்தை உருட்டி வீசிக் கொள்வதைப் பார்த்தால் சாப்பிடுவதில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷமோ அமைதியோ தெரியவில்லை.

அவன் சாப்பிடுவதையே ஒரு அதிசயத்துடனும் ஆத்திரத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தாள் அவன் மனைவி.

'ஈருகோலியாலபேனுலுக்கேன ஏன் இப்படி உலுப்பிக்கிற... ஒடல்ல ஒட்டுமா...ஆற அமர சாப்பிடுறதுக்கென்ன..?'

'ஹக்கும் சாப்பாடு ஒன்னு தான் இப்ப கொறச்சல்.தேதி பதினெட்டாச்சு...சம்பளம் போட்டு எத்தினி நாளாவது....அந்தப் பயலைக் காணலியே.... டோக்கருகுடுத்துறுவானோ....'

'அதெல்லாம் ஒன்னும் இருக்காது ரொம்ப நல்ல தம்பி அது.....நம்ம சீட்டக்குடுத்திட்டியா....'

'நல்லா குடுப்பனே....சீட்டு தொவங்குனப்பலேருந்து சொல்லிகிட்டே வந்திருக்கேன்....கிறிஸ்மஸ்க்கு எனக்கு வேனும்....நான் புள்ளக்குட்டி காரன்னு.....முந்தாநேத்தும் கேட்டேன்....இன்னும் பிரிக்கலேப்பான்னு சொன்னான்....ஏவட்டு சீட்டைக் கொறச்சிக்கிட்டு குடுத்துறுன்னுட்டேன்....'

'முந்தாநேத்தும் கேட்டிருக்கல்ல அப்பறம் என்னா....'

'அப்புறம் என்னாவா! ஏண்டி சொறனைகெட்ட இதே...! இன்னிக்கு தேதி எத்தினி...பதினெட்டாச்சுல்ல....நாளைக்கும் போனா அங்குட்டு எத்தனை நாளிருக்கு....செவுத்துக்குத்தான் சுண்ணாம்பு இல்லேன்னதும் மண்ணை பூசிப்புட்டே...ஒம் பொறுப்புகளுக்கு என்னத்த சொல்லுவே...நாலப்பெத்து வச்சிருக்கியே...ஒன்னு பாவாடைங்கும் ஒன்னு சட்டைங்கும்... இன்னொன்னு பெலுனுங்கும் பட்டாசுங்கும்......எங்கே போறது..... வச்சிறுக்கியா... பெட்டில... எடேன் சோற்றை உருட்டி உருட்டி போட்டுக் கொண்டவன் அவளை ஒரு ஏளனத்துடன் முறைத்தான்.

'இந்தா சும்மா மனசப்போட்டு ஒளப்பிக்கிறாதே....... ஆடிப்பூசை, தீபாளி, பொங்களுன்னா லயத்துப்புள்ளைக எல்லாம் புதுச்சட்டை பாவாடைன்னு திரியும்.இதுகளுக்கும் வாங்கிக் குடுக்காட்டி ஏமாந்து போயிருங்கன்னு சொல்லலாம்.இப்ப என்ன நாம மட்டுந்தானே, ரெண்டு பாவாடை சட்டையை தொவச்சிப் போட்டுகிட்டாக்க போவுது...'என்றவளை எரித்து விடுபவன் போல் முறைத்தவன் எழுந்து கையைக் கழுவிக் கொண்டு வெளியேறினான்.

'லயத்துக்கே போயி சரி, சீட்டுக்காசைத் தாறியா இல்லையயான்னு அவனைப்பார்த்து ரெண்டுல ஒன்னு கேட்டுக்கிட்டு வந்துடுறேன்' என்று அவளிடம் கூறியவன், 'ரெண்டப்போட்டுக்கிட்டு, ஜிவ்வன்னு போனாத்தான் கட்டன்றைட்டாப் பேசலாம்' என்ற நினைவுகளுடன் நடையை நாட்டுக்கு மாற்றிவிட்டான்.

'பெருநாள் வருது.... இன்னம் ஒரு எளவு கூட வாங்கல்ல...என்ன சொல்றே...'என்ற படி அறைச்சுவரைப் பிடித்துப் படியேறித்தள்ளாடியபடி நின்ற சிலுவையை வரவேற்றான் சீட்டுப்பிடிக்கும் சிவசாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடடே சிலுவையா வாப்பா வா...ஓவுட்டு சிலுவையை நீயே தூக்கிக்கிட்டு தானே வந்திருக்கே....நானே வந்து ஒன்னைப் பாக்கனும்னுதான் இருந்தேன்...'

'நீயா வரணும்னு இருந்தே...சீட்டுக்காசு வாங்கயில மட்டம்தானே வருவே குடுக்கயில எங்க வரப்போற....?'

'ஏம்பா என்னையுயம் உன்னைய மாதிரி நெனைச்சுக்கிட்டியா.நீ மட்டும் தான் சீட்டுக்காசு குடுக்கலே...மத்தவங்கெல்லாம் குடுத்துட்டாங்க....'

'எனக்குத்தானே இந்த மாசம் சீட்டு.ஏவுட்டைக் கழிச்சிட்டு மற்றதைக் குடுத்திறேன்.'

'குடுத்திறலாம் தான் ஆனா...நம்ம நைட் டிஸ்கூல் டீச்சரோட பேத்தி எட்டுமாச வயித்துப்பிள்ளையோட மலையிலேருந்து விழுந்திருச்சே தெரியுமா...அதை தோட்டத்து ஆஸ்பத்திரியில வச்சிப்பார்க்க முடியாதுன்னு பதுளைக்கு அனுப்பிட்டாங்க.கைல மடியில ஒன்னுமில்லாட்டி அரசாங்க பெரியாஸ்பத்திரியில சமாளிக்க முடியுமா....ஒனக்கு இந்த மாசமும் டீச்சருக்கு வாற மாசமும்னுதான் பேச்சு.அதுக்கு அடுத்து ஒனக்கு பெருநாளு...என்ன செய்யலாம்.ஒரு சீட்டை கொறச்சே அதுக்குக் கொடுத்துட்டேன்.....நீ பெருநாள் காரங்கிறதுனால இந்த மாசச் சீட்டை குடுக்க வேணாம்...'

'ஆயிரத்தைசொல்லுங்க எவ்வளவு நம்பியிருந்தேன்...'

'அது சரி சிலுவை என்ன செய்யிரது.சத்தியமா உனக்குதான் குடுத்திருக்கனும்.ஓம்பேரைச் சொல்லியேதான் சீட்டுப் பிரிச்சேன்..அங்கே ஒரு உசிரு போவுதில்ல...எதுபெரிசு...!அட உனக்கேதான் குடுத்துட்டேன்னு வச்சிக்கோ.நீ என்ன செஞ்சிடப்போறே பெருசா.....நாலு புதுத்துணி எடுப்பே...ஒரு போத்தல கொண்டாறுவே....'

'அந்தக் கதையெல்லாம் எதுக்கு....நானு ஒரு போத்தலைக் கொண்டாறேன் இல்ல ஒம்பது போத்தலைக் கொண்டாறேன்....சீட்டு எனக்குன்னா காசைக் குடுத்துட வேண்டியது தானே....நானும் இப்ப காசை வாங்காமப் போகப் போறது இல்ல...'
வாசற் படியில் உட்கார்ந்து கொள்ளுகிறான் சிலுவை.

'பாத்தியா புத்தி எங்கே போவுதுன்னு...ஒம்பது போத்தல கொண்டாறுவீகளோ வெளக்கெண்ணை....'என்றவர் கேலியாகச் சிரித்தப்படி 'காசு வாங்காமப் போகமாட்டேல்ல..சரி பாப்பமே...ஏலெய் தம்பி அந்த நாயை அவுத்துவிடு....காசு வாங்கிட்டுப் போறானா, கடி வாங்கிட்டு போறானான்னு பாப்போம்' என்கிறார்.
மனிதனிடம் தான் பேசலாம், வாதிடலாம் சண்டை போடலாம் நாயிடம்....!

தோட்டத்தில் இருப்பவர்கள் சாமப் பூஜைக்குப் போவது சிரமம்.ஏசு பிறக்கும் அந்த நடுஇரவுப் பூஜைக்குப் போவது என்பது கிறிஸ்துவ சம்பிரதாயம். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியம். கொட்டும் மழையிலும் குளிரிலும் அந்தப் பன்னிரண்டு மணி இருட்டில் பத்து மைல்களுக்கப்பாலுள்ள கோவிலுக்கப் போய் சாமபூஜை காணுவதென்பது மிகவும் சிரமமான காரியம்.

பெரிய கிளார்க், சின்ன டீமேக்கர், ஒரு சுப்பவைசர் குடும்பத்துடன் சிலுவையின் குடும்பத்தையும் சேர்த்துக் கொண்டால் ஒரு பதினைந்து பேர் கிறிஸ்தவர்கள் இருப்பார்கள்.

பெரிய கிளார்க் கிறிஸ்தவராக இருப்பதால் துரையிடம் பேசி தோட்டத்து லொறியைக் கொண்டு போக உத்தரவுவாங்கிக் கொள்வார்.இரவு பத்துமணிபோல் எல்லாரும் பெரியய்யா பங்களாவுக்கு வந்துவிட வேண்டும்.லொறி தயாராய் நிற்கும்.உள்ளே நாற்காலி போட்டு வைத்திருப்பார்கள்.உட்காருவதற்கும் விழுவதற்குமாக.

இந்த முறையும் லொறிக்கு உத்தரவு வாங்கியாகி விட்டது. அய்யா எல்லாருக்கும் செய்தி அனுப்பிவிட்டார்.ராத்திரிப் பூசைக்குப் போகிறவர்கள் இரவுப் பத்து மணிக்கு பங்களாவிடம் வந்து விட வேண்டும் என்று.செய்தி வந்ததும் சிலுவை சீறினான். 'வேற வேல மயிரு கெடையாது.காசிருக்கிறவனுக சுண்ணாம்பு அடிச்சிக்கிறானுக... வெள்ளையும் சள்ளையுமா மாட்டிக்கிட்டு பூசைக்குப் போவானுக...நான் என்ன செய்ய....'

அவன் மனைவி எவ்வளவோ வாதாடிப் பார்த்தாள்.பிள்ளைகள் அழுது அடம் பிடித்தன.லொரியில ஏறக்கிடைக்கும் வாய்ப்பை இழப்பது சிறுசுகளால் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்று.

கொழுந்தேற்றிக்கொண்டு போகும் போது ஆசைக்கு கொஞ்சம் தொத்தினாலும் விடமாட்டார்கள்.இப்போது அதே லொறியில் ஏறி உட்கார்ந்து போவதென்றால் சாமான்யமா!

நாட்டுக்குப் போய் திரும்பிய சிலுவை மரம் போல் தரையில் கிடந்தான்.வழக்கத்தைவிட இரண்டு மூன்று பங்கு கூடுதலாக குடித்திருந்தான்.
அவனைத் தட்டிப் புரட்டி எழுப்பப்பார்த்தவள் மிகவும் சோர்ந்து போனாள்.சிலுவை மிகவும் பாரமாய் இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

'சரி சரி அது கெடக்கட்டும் நாம பூசைக்கு போயிட்டு வருவோம்' என்று பிள்ளைகளை உடுத்தச் சொன்னாள்.

நன்றி : நாமிருக்கும் நாடே [ஆசிரியரின் விருப்பத்துடன் மீள் பிரசுரிக்கப்டுகிறது]

## வெற்று வேட்டு

ரூத் - கண்டி

அரசியல் வாதியின்
வெற்று வேட்டு வேள்வியில்
மே தின கோரிக்கைகள்
எரிந்து சாம்பலாக்கிட
வெற்றுப் பொத்தலுடன்
வீடுகளுக்கு
திரும்பினர்
தொழிலாளிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்காளிகள்

- பாதை செப்பனிட்டேன்
- வர்ண பெயின்ட் அடித்தேன்
  பூங்கன்று நட்டினேன்
- நாயின் உன்னி பிடுங்கினேன்
  மாட்டு பட்டி கழுவினேன்
  அளவாய் வேலி வெட்டினேன்
  மகிழ்ந்தார்கள்
  அம்மாவும் ஐயாவும்
  "ஐயா லயத்து பிரச்சினை" என்றேன்
  "ஒபிசுக்கு வாரது"
  என்றார் ஐயா
  மகிழ்வோடு லயமாய் சென்றோம்
  குடிக்கத் தண்ணீர்
  லயத்து கூறை திருத்தம் கேட்டோம்
  போராட்டமா?
  "பொலிசு வரும், ஆமிவரும்"
  என்றார் அதிகாரி
  முகத்தில்
  எள்ளும், கொள்ளும்
  வெடிக்க
  அவர்
  வீட்டுநாயாய் மாறி
  கத்தினார்
  துரத்தினார்

ஜெயா – நுவரெலியா



## நரிகள்

நரிகள் –மலைத்தம்பி–
எல்லாம்
பரிகளாகின
மாணிக்கவாசகர்
நாயனாரினால்
பரிகளை
எல்லாம்
நரிகளாக்கி
மே தினத்தில்
ஊளையிட விட்டான்
சால்வை நாயகன்.



## தீ

வாக்குரிமை
பறிந்தான்
பிரஜா உரிமை
பறித்தான்
ஜனவசம,
உசவசம என
காணி
பறித்தான்
தொழில்
பறித்தான்
அடி வயிறு
பற்றி எரிந்தது
இன்றோ
கட்டாயக் கருத்டை
கச்சிதமாய்
நடத்துகின்றான்
தீ பற்றியது
உயிர்

தேவன் – கொட்டகலை

## வலை

பழைய
சாரியினை செடி
தேயிலை கிழிக்காதிருக்க
கிழிக்கவமாய்
பக்குவமாய்
இடுப்பில்
படங்கு
சுற்றி
மலை
ஏறும்
மங்கையரே
நம்
வாழ்வை
கிழித்து
ஏப்பமிடும்
பெருச்செலிகளுக்கு
வலை
சுற்றுவது
எப்போது..?

வள்ளி – இராகலை

## சால்வை மன்னன்

ஆண் பிள்ளைகளை
கொன்று
இனம் அழித்தான்
பார்வோன் மன்னன்
இது
கி. மு
இரண்டு வயதிற்குட்பட்ட
பிள்ளைகளை
கொன்றான்
ஏரோது மன்னன்
இது
கி. கா
மலையகத்தில்
குழந்தைகளே
பிறக்காது
தாய்மார்
கருவையே
அழிக்கின்றான்
பார்வோனும்
ஏரோதும்
ஒன்றாக் கலந்த
நம் கால
சால்வை மன்னன்
இது
கி. பி



எம். எஸ். – பேராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம் - கருப்பையா தலைவர் -

பல வர்ண கொடிகளாலும், வலைவு தோரணங்களாலும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கட்சிக் கொடிகள் எங்கும் பறந்தன.

"மண்ணில் வியர்வை விதைத்திடனும், உரிமை குரல் உயர்ந்திடனும், உழைப்பாளர் ஒன்றாய் திரண்டிடனும், வாழ்வில் உறுதி பெற்றிடனும்" ஒலி பெருக்கியில் பாடல் ஊரெங்கும் கேட்டது.

"தொழிலாளர் வாழ்க, உழைப்பாளர் உயர்க, முதலாளித்துவம் வீழ்க, தொழிலாளர் வர்க்கம் வாழ்க, காணி நிலம் எமக்கு வேண்டும், சொந்த வீடு எமக்கு வேண்டும்" என்ற கோசங்களோடு ஊர்வலம் மே தின மேடை நோக்கிப் புறப்பட்டது. வெள்ளை உடை தரித்தோர் முன்னால் சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டோரில் ஒரு சிலர் சாரத்தை சற்று தூக்கி உள்ளே அணிந்திருந்த காட்சட்டைப் பையில் வைத்திருந்த சாராயப் போத்தலை எடுத்து சற்று வாயில் ஊத்திக் கொண்டனர். தொடர்ந்து "பெரிய ஐயா வாழ்க, நம்மத் தலைவர் வாழ்க" என தப்பின் தாளத்தோடு போதையில் தள்ளாட வைக்க வலைந்தும், குனிந்தும் ஆடினர். "எவன்டா அவன் மத்த தப்பு எங்க", "கிழிஞ்சிறிச்சி" பக்கத்தில் வந்தவர். "வாழ்க்கையே கிழிஞ்சி நார் நாராத் தொங்குது, தப்பு மட்டும் கிழியாதா?" போதையில் வந்தவர். தலைவர் வரும் நேரம் இது. ஊர்வலம் மேடையை அண்மித்து விட்டது.

பட்டாசு வெடிக்க, பொலிசாரின் துணையோடு தொழிலாளர்களைத் தள்ளிக் கொண்டும், வீழ்த்திக் கொண்டும், மேடையில் வந்தமர்ந்தார் தலைவர். மீண்டும் "ஐயா வாழ்க, தலைவர் வாழ்க" பழைய கோசம் ஒலிபெருக்கியில் ஒழித்தது. கட்சி தலைவர் எழுந்து ஒலி வாங்கி அருகில் வர, கருப்புக் காற்சட்டையும், வெள்ளை சேட்டும் அணிந்த இருவர் தலைவருக்கு இரு பக்கங்களிலும் வந்து நின்றனர்.

"எனக்கு தெரியும் நீங்க எல்லோரும் வருவீங்கன்னு. எனது வெற்றி உங்களது வெற்றி, ஒங்களுக்காகத் தான் நான் பாராளுமன்றத்துல உட்கார்ந்து இருக்கிறேன். நம்ம தான் என்னைக்கும் ஜெய்ப்போம். நம்மள எதிர்த்து புதுசா எவரும் மேதினக் கூட்டம் போட முடியாது." பேசி முடித்துவிட்டு தலைவர் போய் அமர்ந்தார். தண்ணீர்த் தாகம் போல. துணியால் மூடப்பட்ட சின்ன போத்தலைக் கொடுத்தார்கள். கிளாஸ் இல்லாமலே அன்னார்ந்து குடித்துவிட்டு மீண்டும் பக்கத்தில் நின்றவரிடம் கொடுத்தார்.

"அத கம்கரு தினய (இன்று தொழிலாளர் தினம்), அபி முழு ரடம சங்வர்தன கரனவா (நாங்கள் முழு நாட்டையும் அபிவிருத்தி செய்கின்றோம்), .....! ஏதேதோ பேசுகையில் மின்சாரம் தடைப்பட்டது. எங்கும் ஒரே இருள்.

"ஏமாற்றாதே ஏமாறாதே, ஏமாற்றாதே ஏமாறாதே" யாரோ ஒருவரின் தொலைபேசி அழைப்பு பாடலாய்க் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படம் கிடைக்கவில்லை

**தியாகி கொம்பாடி**

புகைப்படம் கிடைக்கவில்லை

**தியாகி பொன்னையா**

நுவரெலியா மாவட்டம், உடப்புசல்லாவ நகரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கிளைக் காரியாலயம் ஒன்று 1957ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13ம திகதி எம். கே. விஜய சுந்தரம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நகரில் தொழிற்சங்கக் காரியாலயம் நிறுவுவதற்கு தோட்ட முதலாளிமார்களும், நகர வர்த்தகர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவ்வெதிர்ப்பு முறியடிக்கப்பட்டதால் ஆத்திரமுற்ற இவர்கள் கிராமத்து சிங்கள மக்களையும், நகரில் உள்ள காடையர்களையும் தூண்டி விட்டு காரியாலயம் திறந்த மறுநாள் 1957 ஜுலை 14ம் திகதி இக்காரியாலயத்தை உடைத்து, அங்கிருந்த பொருட்களைச் சூறையாடி கட்டடத்தை தீயிட்டுக் கொளுத்தினர். இதனோடு, ரப்பானை தோட்டத்தைச் சேர்ந்த பெரிய கங்காணி சிதம்பரம் என்பவருக்குச் சொந்தமான நகரிலிருந்த கடையொன்றையும் உடைத்து பொருட்களையும்,பணத்தையும் சூறையாடி கட்டடத்தையும் எரித்தனர்.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தனர். மறுநாள் 15ம் திகதி அப்குதியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இச் செயலைக் கண்டித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மேலும் ஆயிரக்கணக்கில் உடபுசல்லாவ நகரில் கூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டார்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டத் தொழிலாளர்களை கட்டுபடுத்த முடியாததால் ஆத்திரமுற்ற பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் எனிக் தோட்டத்தைச் சேர்ந்த கொம்பாடி, பொன்னையா, ஆகிய இரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இவ் வீரத் தியாகிகளின் உடல்கள் தொழிலாளர்களின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் 16.07.1957 அன்று எனிக் தோட்ட மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மலையகத்தில் தொழிற்சங்கத்தை ஸ்தாபிக்கவும், தொழிற்சங்கக் காரியாலயத்தை திறக்கவும் பெரும் போராட்டங்களையும் உயிர் தியாகங்களையும் செய்ய வேண்டி ஏற்பட்டதற்கு இச் சம்பவமும் ஒரு எடுத்து காட்டாகும். இவ்வாறு தொழிலாளர்களின் உதிரத்தாலும், தியாகத்தாலும் கட்டி யெழுப்பப்பட்ட தொழிற்சங்கங்கள் இன்று தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், மேம்பாட்டிற்காகவும் உழைக்காது முதலாளிமார்களினதும், ஆட்சியாளர்களினதும் நலன்களை பேணுவதிலேயே அக்கறை கொண்டுள்ள நிலையானது மிகவும் வேதனைக்குரியதாகும்.

**தனிச் சுற்றுக்கு மட்டும். மலையக சமூக ஆய்வு மையத்தினால் வெளியிடப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org